கட்டுரை 02

சமாதானம் மற்றும் சகவாழ்வை
நோக்காகக் கொண்ட

# சமூகங்களுக்கிடையிலான கலந்துரையாடல்

## கட்டுரை - 02

வெளியீடு

ALL CEYLON JAMIYYATHUL ULAMA

UNITY HUB

UNITY | HUMANITY | DIVERSITY | PROSPERITY

## முஸ்லிம்களது சனத்தொகை வளர்ச்சி தொடர்பான அச்சம்

# முன்னுரை

இலங்கை பல்லின மற்றும் பல மதங்களைப் பின்பற்றும் மக்கள் வாழும் ஒரு நாடாகும். இந்தப் பன்மைத்துவத்தினுள் உள்ள பல்வேறு தரப்பினருக்கும் மத்தியில், கருத்து வேறுபாடுகள் உருவாகுவது தவிர்க்க முடியாத ஒரு விடயமாகும். ஆனாலும், இந்த நாட்டின் சமாதானத்தைத் தொடர்ந்தும் பேணிச் செல்ல வேண்டுமாயின், இக்கருத்து வேறுபாடுகளை, சமூகங்களுக்கிடையிலான வெறுப்பு, குரோதம் ஆகியவற்றை உருவாக்கும் காரணியாக மாற்றிக் கொள்ளக் கூடாது. இவ்வாறான கருத்து வேறுபாடுகள் உருவாகும்போது, சமூகங்களுக்கு இடையில் அந்நியோன்ய புரிந்துணர்வின் மூலம் பிரச்சினைகளை கலந்துரையாடுவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

மத மற்றும் இனக் குழுக்களுக்கு இடையில், அடிக்கடி எழுகின்ற பிரச்சினைகளை தெளிவுபடுத்துவதை நோக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள "சமூகங்களுக்கிடையிலான கலந்துரையாடல்" என்ற இந்தக் கட்டுரைத் தொடர் எம் அனைவரது அவதானத்துக்கும் உட்பட வேண்டிய முக்கியமான கட்டுரைத் தொடர் எனக் கருதுகிறேன். சமூகத் தரப்புகளுக்கு இடையில் அர்த்தமுள்ள கலந்துரையாடலொன்றுக்கான அமைதியான வாயில்களைத் திறந்து, எமது பிரச்சினைகளை எமக்கு மத்தியிலேயே தீர்த்துக் கொள்ளும் வழிமுறையை நோக்கிய முக்கியமான கட்டுரைத் தொடராகவும் இதனை நான் காண்கிறேன்.

இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள முக்கியமான, யதார்த்தமான மற்றும் தர்க்க ரீதியான கருத்துக்களை நான் பாராட்டுகிறேன். மன எழுச்சியையும் வெறித்தனத்தையும் பின்னே தள்ளி இலங்கையர்கள் என்ற வகையில், எமது பாரம்பரிய இணைப்புக்களையும் சகோதரத்துவத்தையும் பாதுகாத்துக் கொண்டு, எமக்கு மத்தியில் உள்ள கருத்து வேறுபாடுகளைத் தீர்த்துக் கொள்வதற்கு இதன் மூலம் சிறந்ததொரு வாயல் திறந்து கொடுக்கப்பட்டுள்ளதை அவதானிக்கலாம்.

எமது கருத்தை ஒத்த கருத்துக்களையே ஏனையோரும் கொண்டிருக்க வேண்டும் என்று சிந்திப்பது பண்பாடான ஒரு முறை அல்ல. தான் கொண்டிருக்கும் கருத்திற்கு முரணான கருத்தைக் கொண்டிருப்பதற்கான உரிமை ஏனையோருக்கு உள்ளதை நாட்டின் அரசியலமைப்பும் உறுதிப்படுத்தியுள்ளது. எனவே, கலந்துரையாடல்கள் மூலம் உடன்பாடொன்றை ஏற்படுத்திக் கொள்வதற்கு வகை செய்வோம். அவ்வாறு செய்வதற்குக் கடினமாகின்ற சந்தர்ப்பங்களில், எனது கருத்துக்கு முரணான கருத்துக்களைக்

கொண்டிருப்பதற்கு ஏனையோருக்கு பூரண சுதந்திரமும் உரிமையும் உள்ளது என்ற அடிப்படை மனித உரிமை சித்தாந்தத்தை ஏற்றுக் கொண்டு, சமாதானமாகச் செயற்படுவதற்கு நாம் அர்ப்பணிப்போம். எவ்வாறாயினும், இந்தக் கட்டுரைத் தொடர் மூலம், எம் அனைவருக்கும் புதிய சிந்தனைத் தொடக்கமொன்று வழங்கப்பட்டுள்ளது என்பதனை ஏற்றுக் கொள்வதற்கு எந்தவொரு கஷ்டமும் இல்லை என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன்.

சமூகப் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்குப் பொருத்தமான வழிமுறை, சமாதானமான கலந்துரையாடல்கள்தான் என இந்தக் கட்டுரைத் தொடர் எமக்கு பலமாகச் சொல்கின்றது.

ஜயங் வெரங் பஸவதி
துக்கங் ஸெதி பராஜிதோ
உபஸன்தோ சுகங் ஸெதி
ஹித்வா ஜய பராஜயங் (தம்ம பதம்)

கருத்து: “வெற்றி பெறுபவன் பிறருடைய கோபத்தை தன் மீது திருப்பிக் கொள்கின்றான். தோல்வியுற்றவனோ கவலை கொள்கின்றான். வெற்றி தோல்வி இரண்டையும் துறந்து திருப்தியடைந்தவன் சுகமாக வாழ்கின்றான்”

சாஸ்ரபதி பண்டித பூஜ்ய கலகம தம்மரங்ஸி தேரர்,
விகாரை தலைமை,
ஸ்ரீ ஹத்போதி விகாரை,
கிருல வீதி,
கொழும்பு 05.

# அறிமுகம்

சமாதானத்தையும் ஐக்கியத்தையும் நோக்காகக் கொண்ட "சமூகங்களுக்கிடையிலான கலந்துரையாடல்" எனும் இந்தக் கட்டுரைத் தொடரைத் தயாரிக்கையில் நாம் பிரதானமாக கவனம் செலுத்தியது பன்மைத்துவத்தினால் அலங்கரிக்கப்பட்ட இலங்கை சமூகத்தின் மத்தியில் நட்புறவையும் ஒற்றுமையையும் கட்டியெழுப்ப வேண்டும் என்ற மிக உயர்ந்த இலக்கையாகும்.

பல்வேறுபட்ட இன, மத மற்றும் கலாசாரங்களினால் கட்டியெழுப்பப்பட்டுள்ள எமது சமூகம் ஒற்றுமை மற்றும் ஐக்கியத்தின் பாதையில் தொடர்ந்து பயணிக்க வேண்டுமாக இருந்தால் அனைத்து குழுக்கள் மத்தியிலும் புரிந்துணர்வை ஏற்படுத்துவது அத்தியவசியமான ஒரு விடயமாகும். இப்புரிந்துணர்வு இல்லாவிட்டால் அடுத்தவர் மீதான சந்தேகம், நம்பிக்கையின்மை, பயம் போன்ற அழிவை ஏற்படுத்தும் காரணிகள் உருவாகுவதற்கு சந்தர்ப்பங்கள் அதிகமாக உள்ளன. எந்தவொரு மதமும் இவ்வாறான சிக்கலான சமூக நிலையை அனுமதிக்காது. கலந்துரையாடல்களின் அடிப்படையிலான சமூக தொடர்புகளின் மூலமாகப் புரிந்துணர்வை ஏற்படுத்தி சமூக ஐக்கியத்தை கட்டியெழுப்புவது காலத்தின் தேவையாகும்.

ஒவ்வொரு மதத்திலும் உள்ள வணக்க வழிபாடுகள் மற்றும் கலாசாரங்கள் பற்றி நாம் அனைவரும் அறிந்து கொள்ள முயற்சிப்பது அத்தியவசியமான விடயமென நாம் நம்புகிறோம். அதேபோன்று சமூக ஐக்கியத்தை ஒரு உறுதியான அடித்தளத்தின் மீது கட்டியெழுப்புவதாயின் எல்லா மதங்களும் அம்மதத்தின் அடிப்படையான அம்சங்களைப் பற்றி ஏனைய மதத்தவர்களுக்கு தெளிவையும் புரிந்துணர்வையும் வழங்குவது மிக முக்கியமானதாகும்.

இஸ்லாம் மற்றும் முஸ்லிம் சமூகத்தைப் பற்றி பல்வேறு பிழையான கருத்துக்கள் ஏற்பட்டுள்ளதென்பதை நாம் ஏற்றுக் கொள்கிறோம். இப்பிழையான கருத்துக்களை தெளிவுபடுத்தி உண்மை நிலையை விளக்குகின்ற பொறுப்பை நாம் தவறவிட்டுள்ளோம் என்பதையும் ஏற்றுக் கொள்கிறோம். காலம் கடந்தேனும் இந்த மிக முக்கியமான பணியை சிறிதளவேனும் செய்வதற்கு சந்தர்ப்பம் கிடைத்ததை ஒரு பாக்கியமாகக் கருதுகிறோம்.

ஆதாரபூர்வமான கலந்துரையாடலுக்கான வாயிலைத் திறந்து கொடுப்பதை அடிப்படையாகக் கொண்ட ஒரு கட்டுரைத் தொடராக இது இருப்பதால் இதில் உள்ளடங்கியுள்ள காரணிகளைப் பற்றிய உங்களது தூய்மையான கருத்துக்களை நாம் மிகவும் உயர்வாகக் கருதுகிறோம். கலந்துரையாடலைப் புறக்கணிக்காது கலந்துரையாடும் சமூகத்தின் மத்தியில் எல்லா விடயங்களையும் சுமுகமாக தீர்த்துக் கொள்வதற்காக உறுதியுடன் செயல்பட இலங்கைத் தாயின் மக்களாகிய நாம் ஒன்றாகக் கைகோர்த்துக் கொள்வோம். சௌபாக்கியம் நிறைந்த அபிவிருத்தி அடைந்த ஒரு இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கு எமது பூரண ஒத்துழைப்பை வழங்குவோம்.


வடிவமைப்பு:
அஷ்-ஷைக் முர்ஷித் முழப்பர்
அஷ்-ஷைக் மாஹிர் ரம்தீன்
அஷ்-ஷைக் இர்ஷாத் ஹில்மி
அஷ்-ஷைக் நு.்.மான் உமர்
சகோதரர் முஹம்மத் தஹ்லான்
சகோதரர் அயாஸ் ஸாலிஹ்
தொலைபேசி : (+94) 0 773 185353
மின் அஞ்சல் : info@acju.lk
இணையம் : www.acju.lk/publications

## உள்ளடக்கம்


- **இலங்கையில் முஸ்லிம்களின் சனத்தொகை வளர்ச்சி பற்றிய பீதிக்கு அடிப்படை உண்டா?**
- **சனத்தொகைத் தரவுகள்**
    - இனப்பிரிவுகளை அடிப்படையாகக் கொண்ட சனத்தொகைத் தரவுகள் 2012
    - இனங்களின் அடிப்படையில் சனத்தொகையை ஒப்பிடுதல் 2012-1881
    - மதங்களின் அடிப்படையில் சனத்தொகையை ஒப்பிடுதல் 2012-1881
    - 2012-1881 பௌத்த-முஸ்லிம் சனத்தொகை இடைவெளி
    - சிங்கள மற்றும் முஸ்லிம் சமூகங்களின் சனத்தொகை மற்றும் அவற்றின் இடைவெளி
- **முஸ்லிம் சனத்தொகைப் பிரச்சினையும் ஊடகமும்**
- **குற்றச்சாட்டு 1**
    - முஸ்லிம்கள் திட்டமிட்டு தமது இனத்தை விருத்தி செய்து வருகின்றனர்.
    - சனத்தொகை வளர்ச்சி குறைவடைவதற்கான காரணங்கள்
        - கல்வி
        - குடும்பக் கட்டுப்பாடு
        - காலம் கடந்த திருமணங்கள்
        - அரச பணியில் ஈடுபடுதல்
        - போதைப் பொருள் பாவனை
        - கருச் சிதைவு
        - பிறந்தவுடன் சிசுக்கள் மரணித்தல்
        - ஒழுக்கச் சீரழிவு
        - மத குருமார்கள்
        - மூன்று தசாப்த யுத்தம்

- குற்றச்சாட்டு 2

1881 ஆம் ஆண்டு முதல் முஸ்லிம்களின் வளர்ச்சி வேகத்தில் சிங்களவர்கள் வளர்ச்சி அடைந்திருந்தால் சிங்களவர்கள் 25.4% வளர்ச்சியை அடைந்திருக்க வேண்டும்.

- குற்றச்சாட்டு 3

2040 ஆம் ஆண்டில் இங்குள்ள சோனகர்கள் பெரும்பான்மை இனமாக ஆகிவிடுவார்கள்.

- குற்றச்சாட்டு 4

திருகோணமலை மற்றும் வவுனியா மாவட்டங்களில் முஸ்லிம் சனத்தொகையின் வளர்ச்சி அசாதாரண அளவில் காணப்படுகின்றது.

அம்பாறை மாவட்ட முஸ்லிம்களின் சனத்தொகை வளர்ச்சியின் விஷேடம்.

**பிரச்சினை:** 2032 ஆம் ஆண்டளவில் முஸ்லிம்கள் இலங்கையில் பெரும்பான்மை இனமாகுவதுடன், ஆட்சியைக் கைப்பற்றத் திட்டமிட்டு வருகின்றனர். இவ்வச்சுறுத்தலில் இருந்து நாட்டைப் பாதுகாப்பதற்கு சிங்களவர்களை விழிப்புறச் செய்வோம்.

## தெளிவுரை

### 'முஸ்லிம்களின் சனத்தொகை வளர்ச்சி பற்றிய பீதி' உண்மையானதா?

சிங்கள மக்களின் உள்ளத்தில் முஸ்லிம்களைப் பற்றிய அர்த்தமற்ற அச்சத்தைத் தோற்றுவிக்கும் நோக்குடன் **'2032 ஆம் ஆண்டளவில் முஸ்லிம்களின் சனத்தொகை சிங்களவர்களை மிகைத்து விடும்'** என்ற பொய்யான பிரசாரம் முடுக்கிவிடப்பட்டுள்ளது. அதன் பின்னர், சிங்கள இனம் அழிவின் விளிம்பில் உள்ளது என்ற தொனிப்பொருளுடன் **'2040 ஆம் ஆண்டில் இந்நாட்டில் சோனகர்கள் பெரும்பான்மை இனமாக ஆகி விடுவார்கள்'** என்ற தலைப்பில் ஒரு சிறு நூல் வெளியிடப்பட்டது. இந்த நூலை வாசிக்கும் போது அவை உறுதியான ஆதாரங்கள் இன்றியே எழுதப்பட்டமை தெளிவாகும்.

2014 ஆகஸ்டு 21 ஆம் திகதி 'அத' சிங்களப் பத்திரிகையில் **'சிங்களவர்கள் பெரும்பான்மையாக இருக்கும் கடைசி நூற்றாண்டு இதுவே'** என்று கூறுவதன் மூலம் முஸ்லிம்கள் இந்நூற்றாண்டின் இறுதியில் இந்நாட்டில் பெரும்பான்மை இனமாக மாறுவார்கள் எனக் கூறப்பட்டிருப்பதைக் காணலாம்.

இவைகளை நோக்கும் போது முஸ்லிம் சனத்தொகை பற்றிய பொய்யான பீதியொன்றை ஏற்படுத்த நினைப்பவர்களுக்கிடையிலும் அது எப்போது நிகழும் என்பது பற்றிய இணக்கப்பாடு கிடையாது என்பதும், அவர்கள் கூறும் விடயத்தில் அவர்களுக்கே முழு நம்பிக்கை கிடையாது என்பதும் தெளிவாகத் தெரிகின்றது. மேற்படி குற்றச்சாட்டை முன்வைப்பவர்களின் மற்றுமொரு கற்பனையைப் பார்ப்போம்.

2012 பொசொன் மாதம் 26 ஆம் திகதி 'https://www.colombotelegraph.com' என்ற இணையப் பிரசுரத்தில் ஜோசப் ஹெமண்ட் என்பவர் எழுதியிருந்த

ஒரு கட்டுரையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தது: 'உத்தியோகபூர்வ சனத்தொகைக் கணக்கெடுப்புக்களின் படி இந்நாட்டில் வாழும் முஸ்லிம்களின் விகிதாசாரம் 7% என்று அறிவிக்கப்பட்டிருப்பினும் 'அத' சிங்களப்பத்திரிகை இவ் விகிதாசாரம் தவறு எனவும் முஸ்லிம்களின் தற்போதைய விகிதாசாரம் 17% எனவும் முஸ்லிம்கள் கருதுகின்றனர்.

இவைகளைப் பார்க்கும் போது முஸ்லிம் சனத்தொகை பற்றிய பீதி சில தனி மனிதர்களுடைய எண்ணங்கள் மீதே கட்டியெழுப்பப்படுகின்றது என்பது தெளிவாகின்றது. இக்குற்றச்சாட்டுக்களின் யதார்த்தம் என்ன என்பதை அறிய 2014 செப்டெம்பர் 7 ம் திகதி 'ராவய' பத்திரிகையில் 11 ஆம் பக்கத்தில் 'சானுக வத்தேகம' என்பவர் எழுதியிருந்த 'சிங்களவர்கள் சிறுபான்மை ஆகலாம் என்பது ஒரு அப்பட்டமான பொய்யாகும்' என்ற கட்டுரையை படிக்கவும். (http://ravaya.lk/?=4166 என்ற இணையத் தொடர் விலாசம் மூலம் இக்கட்டுரையை பார்க்கலாம்)

மேலும் இது தொடர்பான சரியான தெளிவைப் பெற சனத்தொகைத் தரவுகளை நோக்குவோம்.




## சனத்தொகை தரவுகள்

1881 முதல் இலங்கையில் சனத்தொகைக் கணக்கெடுப்புக்கள் ஆரம்பமாயின. அன்று முதல் 2012 ஆம் ஆண்டு வரையான சனத்தொகைத் தரவுகளை நாம் எமது இந்த தெளிவுரைக்கு பயன் படுத்திக்கொள்வது பொருத்தமாக இருக்கும் என நம்புகின்றோம்.

## 2012 ஆம் ஆண்டின் இன அடிப்படையிலான தரவுகள்

| சிங்களவர் | தமிழர் | சோனகர் | பறங்கியர் | மலாய் | ஏனையோர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 15,173,820 | 3,113,247 | 1,869,820 | 37,061 | 40,189 | 29,586 | **20,263,723** |
| 15.17 மில்லியன் | 3.11 மில்லியன் | 1.86 மில்லியன் | 0.036 மில்லியன் | 0.04 மில்லியன் | 0.03 மில்லியன் | **20.26 மில்லியன்** |
| 74.88% | 15.36% | 09.23% | 00.18% | 00.20% | 00.15% | - |

மூலம்: http:mawbima.lk/-43369-34news-detail.html

மேற்படி தரவுகள் முன்னாள் அமைச்சர் சரத் அமுனுகம பாராளுமன்றத்தில் முன்வைத்த தகவல்கள் அடிப்படையில் அமைக்கப்பட்டவையாகும்.

## 2012 -1881 வரை இன அடிப்படையிலான

| வருடம் | சிங்களவர் | | இலங்கைத் தமிழர் | | இலங்கைச் சோனகர் | | இந்தியத் தமிழர் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | No. | % | No. | % | No. | % | No. | % |
| 1881 | 1,846,600 | 66.91% | 687,200 | 24.90% | 184,500 | 6.69% | | |
| 1891 | 2,041,200 | 67.86% | 723,900 | 24.07% | 197,200 | 6.56% | | |
| 1901 | 2,330,800 | 65.36% | 951,700 | 26.69% | 228,000 | 6.39% | | |
| 1911 | 2,715,500 | 66.13% | 528,000 | 12.86% | 233,900 | 5.70% | 531,000 | 12.93% |
| 1921 | 3,016,200 | 67.05% | 517,300 | 11.50% | 251,900 | 5.60% | 602,700 | 13.40% |
| 1931 | 3,473,000 | 65.45% | 598,900 | 11.29% | 289,600 | 5.46% | 818,500 | 15.43% |
| 1946 | 4,620,500 | 69.41% | 733,700 | 11.02% | 373,600 | 5.61% | 780,600 | 11.73% |
| 1953 | 5,616,700 | 69.36% | 884,700 | 10.93% | 464,000 | 5.73% | 974,100 | 12.03% |
| 1963 | 7,512,900 | 71.00% | 1,164,700 | 11.01% | 626,800 | 5.92% | 1,123,000 | 10.61% |
| 1971 | 9,131,300 | 71.96% | 1,424,000 | 11.22% | 828,300 | 6.53% | 1,174,900 | 9.26% |
| 1981 | 10,979,400 | 73.95% | 1,886,900 | 12.71% | 1,046,900 | 7.05% | 818,700 | 5.51% |
| 1989 | 12,437,000 | 73.92% | 2,124,000 | 12.62% | 1,249,000 | 7.42% | 873,000 | 5.19% |
| 2011-12 | 15,173,820 | 74.88% | 2,270,924 | 11.21% | 1,869,820 | 9.23% | 842,323 | 4.16% |

**(Source: Department of Census & Statistics, Sri Lanka)**

## சனத்தொகைத் தரவுகள்

| இலங்கை மலே | | பரங்கியர் / யுரேசியர் | | இந்தியச் சோனகர் | | ஏனையோர் | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| No. | % | No. | % | No. | % | No. | % | No. |
| 8,900 | 0.32% | 17,900 | 0.65% | | | 14,500 | 0.53% | 2,759,700 |
| 10,100 | 0.34% | 21,200 | 0.70% | | | 14,200 | 0.47% | 3,007,800 |
| 11,900 | 0.33% | 23,500 | 0.66% | | | 20,000 | 0.56% | 3,566,000 |
| 13,000 | 0.32% | 26,700 | 0.65% | 32,700 | 0.80% | 25,600 | 0.62% | 4,106,400 |
| 13,400 | 0.30% | 29,400 | 0.65% | 33,000 | 0.73% | 34,600 | 0.77% | 4,498,600 |
| 16,000 | 0.30% | 32,300 | 0.61% | 36,300 | 0.68% | 41,800 | 0.79% | 5,306,000 |
| 22,500 | 0.34% | 41,900 | 0.63% | 35,600 | 0.53% | 48,900 | 0.73% | 6,657,300 |
| 25,400 | 0.31% | 46,000 | 0.57% | 47,500 | 0.59% | 39,500 | 0.49% | 8,097,900 |
| 33,400 | 0.32% | 45,900 | 0.43% | 55,400 | 0.52% | 19,900 | 0.19% | 10,582,000 |
| 43,500 | 0.34% | 45,400 | 0.36% | 27,400 | 0.22% | 15,500 | 0.12% | 12,689,900 |
| 47,000 | 0.32% | 39,400 | 0.27% | | | 28,400 | 0.19% | 14,846,800 |
| 48,000 | 0.29% | 42,000 | 0.25% | | | 52,000 | 0.34% | 16,825,000 |
| 40,189 | 0.20% | 37,061 | 0.18% | | | 29,586 | 0.14% | 20,263,723 |

## 2012 -1881 வரை மத அடிப்படையிலான

| வருடம் | பௌத்தம் | | இந்து | | இஸ்லாம் |
|---|---|---|---|---|---|
| | No. | % | No. | % | No. |
| 1881 | 1,698,100 | 61.53% | 593,600 | 21.51% | 197,800 |
| 1891 | 1,877,000 | 62.40% | 615,900 | 20.48% | 212,000 |
| 1901 | 2,141,400 | 60.06% | 826,800 | 23.19% | 246,100 |
| 1911 | 2,474,200 | 60.25% | 938,300 | 22.85% | 283,600 |
| 1921 | 2,769,800 | 61.57% | 982,100 | 21.83% | 302,500 |
| 1931 | 3,266,600 | 61.55% | 1,166,900 | 21.99% | 354,200 |
| 1946 | 4,294,900 | 64.51% | 1,320,400 | 19.83% | 436,600 |
| 1953 | 5,209,400 | 64.33% | 1,610,500 | 19.89% | 541,500 |
| 1963 | 7,003,300 | 66.18% | 1,958,400 | 18.51% | 724,000 |
| 1971 | 8,536,800 | 67.27% | 2,238,600 | 17.64% | 901,700 |
| 1981 | 10,288,300 | 69.30% | 2,297,800 | 15.48% | 1,121,700 |
| 2012 | 14,222,844 | 70.19% | 2,554,606 | 12.61% | 1,967,227 |

(**Source:** Department of Census & Statistics, Sri Lanka)


மேலே உள்ள அட்டவணையின் மூலம் புலனாகும் முக்கியமானதொரு விடயம் என்னவெனில் 1881ஆம் ஆண்டில் 21.51% ஆக இருந்த ஹிந்துக்களின் சனத்தொகை, தற்போது 12.6% ஆக குறைவடைந்துள்ளது என்பதாகும். ஒரு இனத்தின் சனத்தொகையில் ஏற்படும் வீழ்ச்சியானது, கட்டாயமாக ஏனைய இனங்களில் அதிகரிப்பாக தென்படுவது இயல்பானது என்பதை அறிவுள்ள எவராலும் புரிந்து கொள்ள முடியும்.

## சனத்தொகைத் தரவுகள்

| | கிறிஸ்துவம் | | ஏனையவை | | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| % | No. | % | No. | % | No. |
| 7.17% | 268,000 | 9.71% | 2,300 | 0.08% | 2,759,800 |
| 7.05% | 302,100 | 10.04% | 800 | 0.03% | 3,007,800 |
| 6.90% | 349,200 | 9.79% | 2,500 | 0.07% | 3,566,000 |
| 6.91% | 409,200 | 9.96% | 1,100 | 0.03% | 4,106,400 |
| 6.72% | 443,400 | 9.86% | 800 | 0.02% | 4,498,600 |
| 6.67% | 518,100 | 9.76% | 1,100 | 0.02% | 5,306,900 |
| 6.56% | 603,200 | 9.06% | 2,200 | 0.03% | 6,657,300 |
| 6.69% | 724,400 | 8.95% | 12,100 | 0.15% | 8,097,900 |
| 6.84% | 884,900 | 8.36% | 11,400 | 0.11% | 10,582,000 |
| 7.11% | 1,004,300 | 7.91% | 8,400 | 0.07% | 12,689,800 |
| 7.56% | 1,130,600 | 7.62% | 8,300 | 0.06% | 14,846,700 |
| 9.71% | 1,509,606 | 7.45% | 9,440 | 0.05% | 20,263,723 |

இந்த சனத்தொகைத் தரவுகள் அனைத்தையும் ஒட்டுமொத்தமாகக் கவனத்தில் எடுக்கும் போது, அவற்றை முஸ்லிம் சனத்தொகையின் அசாதாரண வளர்ச்சியாகக் காட்ட முயற்சிப்பதானது சிங்கள மக்களின் உள்ளங்களில் முஸ்லிம்களின் சனத்தொகை பற்றிய பீதியொன்றைத் திட்டமிட்டே வித்திட மேற்கொள்ளப்பட்ட முயற்சிதான் என்ற சந்தேகம் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது. ஊடக தர்மத்திற்கு மாற்றமாகச் செயற்படும் சில பத்திரிகைகளும் உண்மைக்குப் புறம்பான இந்த கூக்குரல்களுக்கு முக்கியத்துவம் அளித்துச் செயற்பட்டுள்ளன. இதற்கான ஒரு உதாரணத்தைக் கீழே தந்துள்ளோம்.

## 1881 – 2012 வரை முஸ்லிம், சிங்கள சனத்தொகை இடைவெளி




1881 முதல் 1981 வரையான 100 ஆண்டுகளில் முஸ்லிம்களின் சனத்தொகை 0.39% என்ற வீதத்தினாலேயே அதிகரித்துள்ளது. இந்த நூறு ஆண்டுகளிலும் முஸ்லிம்களின் சனத்தொகை முறையே 7.17% மற்றும் 7.56% என இருந்துள்ளது. ஆனால் இதே 100 ஆண்டுகளில் சிங்கள மக்களின் சனத்தொகை 7.77% வீதத்தால் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த நூறு ஆண்டுகளிலும் சிங்கள மக்களின் சனத்தொகை முறையே 61.53% மற்றும் 69.30% ஆக இருந்துள்ளது. மேலே உள்ள அட்டவணையில் சிங்கள மற்றும் முஸ்லிம் சமூகங்களின் சனத்தொகை காட்டப்பட்டுள்ளதுடன் அதைக் கவனமாக எடைபோடும் பட்சத்தில், சிங்களவர்களை முஸ்லிம்கள் எண்ணிக்கையால் மிஞ்சுவார்கள் என்ற வாதம் ஒரு நகைப்பிற்குரிய கற்பனையே தவிர வேறில்லை என்பதை விவேக சிந்தனை உள்ள எவரும் ஏற்றுக் கொள்வர்.

குறிப்பாக சனத்தொகை நிபுணர் அல்லது கணித நிபுணரொருவருக்கு இந்த உண்மை மிகத்தெளிவாகப் புரியும். மேலும், இனங்களின் எண்ணிக்கைப் பெறுமானங்கள் மூலம் சிங்கள மற்றும் முஸ்லிம்

சனத்தொகை இடைவெளி படிப்படியாக அதிகரித்து வந்துள்ளமையும் தெளிவாகத் தென்படுகின்றது. சனத்தொகையை அடிப்படையாக வைத்து இஸ்லாம் பற்றிய பீதியொன்றை எவ்வாறு உருவாக்க முடியும்? என இந்தத் தரவுகளே நம்மிடம் கேள்வி கேட்பதைப் போலத் தோன்றவில்லையா?

### சிங்கள மற்றும் முஸ்லிம் சமூகங்களின் சனத்தொகை மற்றும் அவற்றின் இடைவெளி

| வருடம் | சிங்களம் | முஸ்லிம் | சிங்கள முஸ்லிம் இடைவெளி |
|---|---|---|---|
| 1881 | 1,846,600 | 197,800 | 1,648,800 |
| 1891 | 2,041,200 | 212,000 | 1,829,200 |
| 1901 | 2,330,800 | 246,100 | 2,084,700 |
| 1911 | 2,715,500 | 283,600 | 2,431,900 |
| 1921 | 3,016,200 | 302,500 | 2,713,700 |
| 1931 | 3,473,000 | 354,200 | 3,118,800 |
| 1946 | 4,620,500 | 436,600 | 4,183,900 |
| 1953 | 5,616,700 | 541,500 | 5,075,200 |
| 1963 | 7,512,900 | 724,000 | 6,788,900 |
| 1971 | 9,131,300 | 901,700 | 8,229,600 |
| 1981 | 10,979,400 | 1,121,700 | 9,857,700 |
| 2012 | 15,173,820 | 1,967,227 | 13,206,593 |

## முஸ்லிம் சனத்தொகை பிரச்சினையும் ஊடகமும்

கடந்த சில காலமாக கொழும்பில் முஸ்லிம்களின் சனத்தொகை அதிகரித்து வருவதாகச் சில பத்திரிகைகளில் வந்த பிழையான செய்திக்கு சனத்தொகை மற்றும் புள்ளி விபரத் திணைக்களம் கீழ்க்காணும் விதத்தில் உத்தியோகபூர்வமாகவே மறுப்புத் தெரிவித்துள்ளது.

கொழும்பு நகரத்தின் சனத்தொகையில் பெரும்பான்மையானோர் சிங்களவர் என்ற போதிலும், இது 24 வீதமாகக் குறைந்துள்ளது என 2012 டிசம்பர் 11 ஆம் திகதி "திவயின" பத்திரிகையில் செய்தி வெளியாகியிருந்தது. 2012 ஆம் ஆண்டின் சனத்தொகை தரவுகளுக்கேற்ப கொழும்பு நகரில் சிங்களவர் 24 வீதமும், தமிழர் 33 வீதமும், முஸ்லிம்கள் 40 வீதமும் இருந்தனர் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளமை பிழையான தகவலாகும் என்றும் அதில் 1971 ஆம் ஆண்டின் சனத்தொகையாக குறிப்பிடப்பட்டுள்ளது, உண்மையில் 1981 ஆம் ஆண்டின் தரவுகளேயாகும் என்று சனத்தொகை மற்றும் புள்ளி விபரத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

கொழும்பு நகரம் என்பது, கொழும்பு மற்றும் திம்பிரிகஸ்யாய என்ற இரண்டு பிரதேச செயலகங்களைக் கொண்டதொரு நகரமாகும். மேற்குறிப்பிட்ட பத்திரிகைச் செய்தியில் கொழும்பு பிரதேச செயலகப் பிரிவையே 'கொழும்பு' என்று குறிப்பிடப்பட்டிருந்து. 2012 ஆம் ஆண்டின் சனத்தொகைக் கணக்கெடுப்பின்படி சிங்களவர் 36.8% ஆகவும் இந்திய வம்சாவழி மற்றும் இலங்கைத் தமிழர் 31.8% ஆகவும் இலங்கைச் சோனகர் 29% ஆகவும் ஏனையோர் 2.4% ஆகவும் காணப்படடனர்.

(http://www.divaina.com/2012/12/11/news08.html
http://lankacnews.com/sinhala/news/88161/)

'இஸ்லாம் பற்றிய பீதி' (**Islamophobia**) என்ற நோய் தொற்றிய சில பத்திரிகையாளர்கள் தமது வாதத்தை நிரூபிப்பதற்குத் தவறான விதத்தில் ஊடகத்தைப் பயன்படுத்துகின்றமைக்கு நல்லதொரு உதாரணமாக மேற்படி திரிபுகளைக் காட்டலாம்.

## குற்றச்சாட்டு 1

### முஸ்லிம்கள் திட்டமிட்டு தமது இனத்தை விருத்தி செய்து வருகின்றனர்

சிங்களவர்களின் சனத்தொகை வளர்ச்சி வீதத்துடன் முஸ்லிம்களது சனத்தொகை வளர்ச்சி வீதத்தை ஒப்பிடும் போது, முஸ்லிம்கள் தமது இனத்தைத் திட்டமிட்டு விருத்தி செய்வது தெளிவாகின்றது.

## தெளிவுரை

இந்தக் குற்றச்சாட்டை ஆராய்வதற்கு எங்களுடன் இணையுமாறு அழைக்கின்றோம்.

1881 முதல் 2012 வரை 130 ஆண்டுகளில் முஸ்லிம்களின் சனத்தொகை வளர்ச்சி வீதத்திற்கேற்ப சிங்களவர்களின் சனத்தொகை வளர்ச்சி அமைந்திருப்பின் அதன் விளைவு என்னவாக இருந்திருக்கும் என்பதை நாம் பார்ப்போம்.

$$\frac{\text{2012 இல் முஸ்லிம்களின் சனத்தொகை X 1881 இல் சிங்களவர்களின் சனத்தொகை}}{\text{1881 இல் முஸ்லிம்களின் சனத்தொகை}} = \text{2012 இல் இருக்க வேண்டிய சிங்களவர்களின் சனத்தொகை}$$

$$\frac{1,967,227 \text{ X } 1,846,600}{197,800} = 18,365,427$$

ஒப்பீட்டு அடிப்படையில் சிங்களவர்களின் சனத்தொகை வளர்ச்சி, முஸ்லிம்களின் சனத்தொகை வளர்ச்சி வீதத்திற்கேற்ப காணப்பட்டிருந்தால் மேலே கூறப்பட்டது போல 2012 ஆம் ஆண்டில் சிங்களவர்களின் சனத்தொகை சுமார் 18.37 மில்லியனாக இருந்திருக்கும். தற்போதைய சிங்களவர்களின் சனத்தொகையின் அடிப்படையில் இது (18,365,427 – 15,173 = 3,191,607) 3.2 மில்லியன் வீழ்ச்சியைக் காட்டுகின்றது. இந்த வீழ்ச்சிக்கான முக்கிய காரணங்கள் இனி வரும் பக்கங்களில் விளக்கப்பட்டுள்ளன.

அதே போன்று மேற்படி 130 ஆண்டுகளில் முஸ்லிம்களின் சனத்தொகை வளர்ச்சி சிங்கள மக்களின் சனத்தொகை வளர்ச்சி வீதத்திற்கேற்ப காணப்பட்டிருந்தால் நிலைமை எவ்வாறிருக்கும் என்பதையும் பார்ப்போம்.

$$\frac{\text{2012 இல் சிங்களவர்களின் சனத்தொகை X 1881 இல் முஸ்லிம்களின் சனத்தொகை}}{\text{1881 இல் சிங்களவர்களின் சனத்தொகை}} = \text{2012 இல் இருக்க வேண்டிய முஸ்லிம்களின் சனத்தொகை}$$

$$\frac{15,173,820 \text{ x } 197,800}{1,846,600} = 1,625,356$$

மேலே உள்ள அட்டவணையின்படி தற்போதைய முஸ்லிம்களின் சனத்தொகையை விட இது (1,967,227 - 1,625,356) = 341,871 குறைவாக உள்ளது. இந்த ஒப்பீடுகளைப் பார்க்கும் போது சனத்தொகையில் குறிப்பிடுமளவு பெரிய மாற்றம் இல்லை என்பது எவருக்கும் தெளிவாகும்.

## சனத்தொகை வளர்ச்சி குறைவடைவதற்கான காரணங்கள்

1881 – 2012 வரையான காலப்பகுதிகளில் சிங்கள மக்களின் சனத்தொகை வளர்ச்சி, முஸ்லிம்களின் சனத்தொகை வளர்ச்சிக்கு ஏற்ப காணப்பட்டிருந்தால் அது இன்றுள்ளதை விட 3.2 மில்லியன் அதிகமாக இருந்திருக்கும் என தெளிவுபடுத்தினோம். சிங்களவர்களின் சனத்தொகை வளர்ச்சியில் காணப்படும் இந்த வீழ்ச்சிக்கு முஸ்லிம்கள் எவ்விதத்திலும் காரணமல்ல என்பதை முதலில் தெளிவுபடுத்த எண்ணுகின்றோம். ஆனால் நாம் இங்கு முன்வைக்கும் எதிர்மறையான விடயங்கள் சிங்கள இனத்தில் மட்டுமே நடைபெறுகின்றன என சுட்டிக்காட்டுவதோ குத்திக்காட்டுவதோ நம்முடைய குறிக்கோள் அல்ல என்பதை நாம் பணிவுடன் வலியுறுத்துவதோடு, நடுநிலையாக இருந்து இவற்றைச் சிந்திக்குமாறு அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

1. கல்வி
2. குடும்பக்கட்டுப்பாடு
3. காலம் கடந்த திருமணங்கள்
4. இளமை கடந்த திருமணம்
5. அரசப் பணியில் ஈடுபடுதல்
6. வெளிநாட்டு உத்தியோகம்
7. போதைப் பொருள் பாவனை
8. கருச்சிதைவு
9. சிசு மரணம்
10. ஒழுக்கச் சீரழிவு
11. துறவறம்
12. மூன்று தசாப்த யுத்தம்

### 01. கல்வி

சிங்களப் பெண்கள் குறைவான பிள்ளைப் பேறுக்கு மற்றுமொரு முக்கிய காரணம் என்னவெனில் அவர்கள் கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதாகும். தமது பிள்ளைகள் நன்றாக கல்வி கற்று ஒரு மருத்துவராகவோ, பொறியியலாளராகவோ இருக்க வேண்டும் என்பது பெரும்பான்மையான சிங்களவர் களின் அபிலாஷையாகும். இந்நிலை காரணமாக உயர் கல்வி கற்றதன் பின், திருமணத்திற்கு முன், தமது வயதில் செழுமையான ஆண்டுகளை இவர்கள் கல்விக்காக அர்ப்பணிக்கும் நிலை

ஏற்படுகின்றது. இதன் காரணமாக இவர்கள் குறைவாகவே பிள்ளைகளைப் பெறுகின்றனர். பௌத்த, ஹிந்து, முஸ்லிம் மற்றும் கத்தோலிக்கர்கள் மத்தியில் உள்ள படித்தவர்கள் வேறுபாடு எதுவுமின்றி குடும்பக்கட்டுப்பாடு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். எனவே, திருமண வயது மற்றும் கல்வி அறிவின்மை ஆகியவற்றை சனத்தொகை அதிகமாவதற்கான முக்கிய காரணிகள் என குறிப்பிடலாம். இன, மத வேறுபாடின்றி திறந்த உள்ளத்துடன் நமது சமூகத்தை நோக்கும்போது இளம் பருவத்திலேயே திருமணம் செய்யும் கிராமத்தினர் மற்றும் ஆரம்ப சில வருடங்களுடன் கல்வி பெறுவதை நிறுத்தி விடுபவர்கள், அதாவது கல்வி அறிவு குறைவாக உள்ள பிரிவினர், அதிக பிள்ளைகளைப் பெறுவது தெளிவான விடயமாகும்.

(மருத்துவ நிபுணர் ஆரியசேன யூ. கமகே 2014 ஜுன் 27 ரிவிர பத்திரிகை)

இலங்கையில் தாய், சேய் மரணங்கள் மற்றும் சனத்தொகை வளர்ச்சி வேகம் குறைந்துள்ளமையானது மக்களின் அறிவு வளர்ச்சியின் வெளிப்பாடுகளாகும்'

(கலாநிதி ஆனந்த ஜயவர்தன - கொழும்பு பல்கலைக்கழகத்தின் சமூகவியல் பிரிவின் பிரதானி)

கல்வி அறிவில் முன்னேற்றம் அடைவது ஒரு தேசத்தின் அபிவிருத்திக்குக் கட்டாயமானதொரு அம்சம் என்ற போதிலும், அது அத்தேசத்தின் சனத்தொகை வளர்ச்சி வேகத்தை குறைவடையச் செய்யும் என்பது முழு உலகமும் ஏற்றுள்ள ஒரு உண்மையாகும்.

இவ்வம்சம் இலங்கையில் முஸ்லிம்களின் சனத்தொகை வளர்ச்சியில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதைப் பார்ப்பது பயனுள்ளதாக இருக்கும் என நம்புகின்றோம்.

இவ்விடயத்தை ஆராய முற்படும் போது முதலில் கவனத்திற்கு வரும் விடயம், பூரண வசதிகள் தரப்பட்ட கல்விக் கட்டமைப்பொன்று முஸ்லிம்களுக்கு இல்லை என்ற விடயமாகும். அத்துடன், உயர் கல்விக்காக முஸ்லிம் அல்லாத பாடசாலைகளில் அனுமதி பெறுவதில் முஸ்லிம் மாணவர்களுக்கு பல சிரமங்கள் இருக்கின்றன. அதேபோன்று பல முஸ்லிம் பாடசாலைகளுக்கு சகல பாடங்களுக்கும் தேவையான ஆசிரியர்கள் இல்லாத பற்றாக்குறை எல்லாக் காலங்களிலும் நிலவுகின்றது. இவை அனைத்தையும் நோக்கும் போது 'முஸ்லிம் சமூகத்தின் கல்வி' திருப்தி அடையும் நிலையில் இல்லை என்பதை எவரும் ஏற்பர். இதன் காரணமாக பாடசாலைகளில் இருந்து இடைவிலகிச் செல்பவர்களின் எண்ணிக்கை ஒப்பீட்டு அடிப்படையில் முஸ்லிம் சமூகத்தில் அதிகமாகவே காணப்படுகின்றது. பல்கலைக்கழகத்திற்குச் செல்லும் முஸ்லிம் மாணவர்களின் வீதம் 4%ஐ விடக் குறைவாகவே உள்ளது. இளம் வயதிலேயே திருமணம் செய்து கொள்ளும் சூழல் முஸ்லிம்கள் மத்தியில் ஏற்பட இதுவும் ஒரு காரணமாகும். தற்போதிருப்பதை விடச் சிறப்பான கல்வித் திட்டமொன்று முஸ்லிம்களுக்காக அமைக்கப்படுவதற்காகச் சம்பந்தப்பட்டவர்கள் கவனம் செலுத்தும் பட்சத்தில் இந்த நிலையில் மாற்றம் ஏற்படலாம்.

## 02. குடும்பக் கட்டுப்பாடு

'சிறிய குடும்பம் தங்கம் போன்றது' என்ற சுலோகத்துடனான குடும்பக் கட்டுப்பாட்டுப் பிரசாரம் இலங்கையில் 1950 ஆம் ஆண்டுகளில் களமிறக்கப்பட்டாலும் அது 1980 ஆம் ஆண்டுகளிலேயே சூடு பிடித்தது. இது தொடர்பாக 2014 ஜூன் 27 ஆம் திகதி ரிவிர பத்திரிகையில் பிரசுரமாகிய வைத்திய நிபுணர் டாக்டர் ஆரியசேன யூ. கமகேயின் கட்டுரையில் ஒரு பகுதியை மேற்கோள் காட்டுவது பொருத்தமாக இருக்குமென எண்ணுகின்றோம்.

> கத்தோலிக்கர்கள் மத்தியிலேயே இலங்கையில் மிகக் குறைவான சனத்தொகை வளர்ச்சி வீதம் காணப்படுகின்றது. அடுத்த சமூகங்களான சிங்களவர்கள், ஹிந்துக்கள் மற்றும் முஸ்லிம்கள் இதில் முறையே உள்ளனர். இயற்கையான விதங்களில் மேற்கொள்ளப்படும் குடும்பக் கட்டுப்பாட்டுச் செயற்பாடுகளைத் தவிர்த்து ஏனைய முறைமைகளைக் கத்தோலிக்க மதம்

அனுமதிப்பதில்லை என்ற போதிலும், குடும்பக்கட்டுப்பாட்டை அதிகம் மேற்கொள்பவர்கள் கத்தோலிக்கர்களே. கல்வி கற்றவர்களின் வீதம் அதிகமாக இருப்பதும் இவர்கள் மத்தியில் தான் என்பதும் இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம். இதேவேளை, பண்டைய சிங்கள கலாசாரம் அதிகமான பிள்ளைகளைப் பெறுவதை வரவேற்று வந்துள்ளது. இதற்கான காரணம் சிங்கள பௌத்த மரபானது, விவசாயத்தை அச்சாணியாகக் கொண்டு சுழன்று வந்தமையாகும். இன்றைய நவீன காலத்தில் போலன்றி, அக்காலத்தில் விவசாய நடவடிக்கைகளுக்காக அதிக ஆள் பலம் தேவைப்பட்டது. இதன் காரணமாக அதிகமான பிள்ளைகள் இருந்த குடும்பங்கள் அன்று செல்வமும் பலமும் உள்ள குடும்பங்களாகத் திகழ்ந்தன. ஆனால் தற்காலத்து சிங்களக் குடும்பங்களின் அமைப்பு முற்றாக மாறியுள்ளது. நவீன சிங்களவர்களுடைய மனப்பாங்கும் மாற்றம் அடைந்துள்ளது. அறிவும் ஆற்றலும் உள்ள ஓரிரு பிள்ளைகள் இருந்தாலே போதுமானது என சிங்களவர்கள் இன்று எண்ணுகின்றார்கள்.

எவ்வாறிருந்த போதிலும் சிங்கள, தமிழ் மக்களில் கல்வியறிவு உள்ளவர்கள், ஆசிரியர்கள், எழுத்தாளர்கள் போன்றவர்களை நோக்கும் போது அவர்கள் எல்லோரும் வித்தியாசமின்றி குடும்பக் கட்டுப்பாட்டு முயற்சிகளை ஒரே விதமாக மேற்கொள்வது புலனாகியுள்ளது.

இது வரை நாம் விளக்கிய விடயங்களைப் பார்க்கும் போது சிங்கள சமூகத்தின் சனத்தொகை வளர்ச்சி வீதத்தில் தாக்கம் செலுத்தி வரும் காரணிகள் யாவை என்பது தெளிவாகியிருக்கும் என நம்புகின்றோம். குடும்பக் கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சைகளை செய்து கொள்பவர்களுடைய எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. ஆனால், நிர்ப்பந்த நிலைமைகள் இருந்தாலே தவிர குடும்பக் கட்டுப்பாட்டு சிகிச்சைகளை செய்து கொள்வதற்கு இஸ்லாம் அனுமதி தருவதில்லை. ஒரு சில முஸ்லிம்கள் மட்டுமே, மார்க்க சட்டம் பற்றிய அறிவின்மையின் காரணமாக இது போன்ற சிகிச்சைகளை செய்து கொள்கின்றனர். பொதுவாக இந்த சிகிச்சைகளைச் செய்து கொள்வதற்கு சிறு ஊக்கத் தொகையும் கொடுக்கப்படுவதுடன், சிறு தொகை பணத்திற்காக தேசத்தின் எதிர்காலத்தை விற்றுவிடுவது எவ்வளவு கேவலமானது என்பதை இதை செய்து கொள்ள நினைப்பவர்கள் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

## 03. காலம் கடந்த திருமணங்கள்

மீண்டும் 2014 ஜூன் 27 ஆம் திகதி ரிவிர பத்திரிகையில் பிரசுரமாகிய வைத்திய நிபுணர் ஆரியசேன யூ. கமகேயின் கட்டுரையில் ஒரு பகுதியை இங்கு தர எண்ணுகின்றோம்.

இங்கு விஞ்ஞான ரீதியான ஒரு விடயமும் உண்டு. முஸ்லிம் சமூகத்தில் அதிக பிள்ளைகள் பிறப்பதற்கான காரணம், அவர்கள் குடும்பக் கட்டுப்பாட்டு முறைமைகளை பயன்படுத்தாமை அல்ல, மாறாக முஸ்லிம் பெண்கள் மிக இளம் வயதிலேயே திருமணம் செய்து கொள்வதாகும். பெண்கள் பிள்ளைகளை பெறுவதற்கு மிகவும் பொருத்தமான காலம் 15 வயது தொடக்கம் 45 வயது வரையான காலப்பகுதியாகும். பொதுவாக இக்காலம் சுமார் 30 ஆண்டுகளாகும். சிங்களப் பெண்கள் திருமணம் செய்து கொள்ளும் வயது, கடந்த பத்தாண்டு காலத்தில் மிகவும் அதிகரித்துள்ள போதிலும், முஸ்லிம் பெண்கள் விடயத்தில் இது அவ்வாறில்லை. சிங்கள குடும்பங்களில் பெண்களின் திருமணம் என்று வரும் போது கல்வி மற்றும் உத்தியோகம் ஆகியவற்றிற்கு அதிக முக்கியத்துவம் தரப்படுகின்றதோடு, பெரும்பாலான முஸ்லிம் குடும்பங்களில் இளமை, அழகு, சௌந்தர்யம் போன்ற விடயங்களுக்கே முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. இதன் போது முஸ்லிம்கள் கல்விக்கு அதிக முக்கியத்துவம் அளிப்பதில்லை. இதே வேளை, ஒரு பெண் 30 வயதில் திருமணம் செய்து கொள்ளும் போது அவளுடைய செழுமையான ஆண்டுகள் 50 வீதத்தால் குறைவடைகின்றது. அக்காலத்தில் பத்து, பன்னிரண்டு பிள்ளைகளை பெற்றெடுத்த தாய்மார்கள் இருந்த போதிலும், இக்காலத்தில் அப்படிப்பட்டவர்கள் இல்லாதிருப்பதற்கான காரணம், திருமணம் செய்து கொள்ளும் வயது கூடியிருப்பதாலேயே அன்றி குடும்பக் கட்டுப்பாடுகள் செய்து கொள்வதால் அல்ல.

சமூக விடயங்களைப் பற்றி ஆராயும் போது ஆத்திரம், வெறுப்பு போன்ற ஒரு சமூகத்தின் மீது நமக்குள்ள கண்மூடித்தனமான எதிர்மறை உணர்ச்சிகளின் அடிப்படையில் அதை மேற்கொள்ளாமல் விவேகம், பகுத்தறிவு, நடுநிலை போன்ற அம்சங்களின் அடிப்படையில் மேற்கொள்வதாலேயே சரியான பதில்களைப் பெற முடியும் என்பதை இது வரை நாம் முன்வைத்த விளக்கங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

இது விடயமாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் சமூகவியல் ஆய்வாளர் பேராசிரியர் மயுர சமரகோன், 2013 ஒக்டோபர் 29 ஆம் திகதி 'அத' பத்திரிகைக்கு எழுதியிருந்த ஒரு கட்டுரையில் இருந்து சில பகுதிகளை இங்கு மேற்கோள் காட்டுவது வாசகர்களுக்கு இவ்விடயம் தொடர்பாக மேலதிக தெளிவை ஏற்படுத்தும் என நம்புகின்றோம்.

தற்கால சமூகம் முகங்கொடுக்கும் பிரதானமான பிரச்சினை குடும்பக் கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியாகும். இதற்கு சமூக மற்றும் விஞ்ஞான ரீதியான சில விடயங்களும் காரணங்களாகின்றன. இன்று 'திருமணம்' என்பதற்கு பொருள் ரீதியான பெறுமானமே தரப்படுகின்றது. இதன் காரணமாக திருமணம் செய்து கொள்ளும் வயது படிப்படியாகக் கூடி வருகின்றது. தற்போது ஆண்கள் 31-33 என்ற வயது எல்லைகளிலும், பெண்கள் 30-31 என்ற வயது எல்லைகளிலும் உள்ளனர். மேலும், வேறு சில காரணங்களாலும் திருமணம் தாமதமாவது மறைமுகமான சமூகப் பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளது. உதாரணமாக, திருமணத்தைப் பிற்போடுவதற்கு கல்வி மற்றும் பொருளாதார விடயங்கள் காரணிகளாக உள்ளன. இருந்தாலும், ஒரு நபருடைய உடல் ரீதியான தேவைகளைத் தள்ளிப்போட முடியாது. இதன் காரணமாக முறையற்ற பாலுறவுகள் இன்று சமூகத்தில் அதிகரித்துள்ளன.

மேற்படி ஆய்விலும் திருமண வயதெல்லை 31 ஐ விட அதிகரித்திருப்பது தெளிவாகின்றது. மேலும், திருமண வயது அதிகரிக்கும் போது குறிப்பிட்ட சமூகத்தின் சனத்தொகை எண்ணிக்கை வீழ்ச்சி அடைவதும், ஒழுக்கம் தொடர்பான பிரச்சினைகள் எழுவதும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இவை சிங்கள சமூகத்தின் தற்போதைய பிரச்சினைகளுக்கான முக்கிய காரணிகள் என்றும் சமூகவியல் பேராசிரியர் சமரகோனால் சமிஞ்சை செய்யப்பட்டுள்ளது.

## 04. அரச பணியில் ஈடுபடுதல்

அரச உத்தியோகங்களில் இருக்கும் முஸ்லிம்களின் வீதம் 1.5%ஐ விடக் குறைவாகும். அதிலும் கணவன் மனைவி இருவரும் அரசப் பணியில் ஈடுபடுபவர்கள் முஸ்லிம்கள் மத்தியில் மிகவும் குறைவே. ஆனால் சிங்களவர்களில் பெருமளவு பேர் அரச உத்தியோகங்களில் ஈடுபடுகின்றனமை வெளிப்படையானதாகும். அதிலும் கணவன் மனைவி இருவரும் அரசாங்க உத்தியோகத்தில் இருப்பவர்களும் அதிக எண்ணிக்கையில் சிங்கள சமூகத்தில் உள்ளனர். இது போன்றவர்களுக்கு பிள்ளைகளைப் பெறுவதிலும் அவர்களைப் பராமரிப்பதிலும் பல அசௌகரியங்கள் இருக்கின்றன. இவை தவிர, மேலும் பல இடையூறுகள் இது போன்ற தம்பதிகளுக்கு இருப்பதை சற்று விளக்கமாகப் பார்ப்போம்.

அரச மருத்துவமனைகளில் தாதி சேவையில் அதிகமான சிங்களப் பெண்கள் ஈடுபடுவதோடு, பேறு கால விடுமுறை பெறுவது இவர்களைப் பொறுத்தமட்டில் சிரமமான வியடமாகும். சிங்களப் பெண்கள் அதிக விகிதாசாரத்தில் ஈடுபடும் மற்றுமொரு உத்தியோகம் ஆசிரியப் பணியாவதோடு, எமது பார்வையில் பிள்ளை பெறுவதை அதைரியப்படுத்தும் துறைகளில் இது முதலிடம் வகிக்கின்றது. மேலும், உத்தியோகம் செய்யும் பெண்கள் அடிக்கடி பிள்ளைப் பேறு விடுமுறை பெறுவதை உத்தியோகத்திற்கு இழைக்கும் அநீதியாகவே சிங்கள சமூகம் நோக்குகின்றது. இது போன்ற நிலைகளில் சனத்தொகை வளர்ச்சி குன்றாமல், எப்படி அதிகரிக்கும்? சனத்தொகை வளர்ச்சியை அதிகரிப்பது தொடர்பாக சிங்கள சமூகத்தின் அடித்தளத்தில் உள்ள இது போன்ற பிரச்சினைகளையும் இடையூறுகளையும் தீர்த்து வைப்பதற்கு அவர்கள் அவசரமாகத் திட்டங்களை வகுப்பது அவசியமாகும்.

## 05. வெளிநாட்டு உத்தியோகம்

பெண்கள் வெளிநாடுகளுக்கு செல்வதும் பிள்ளைகள் பிறப்பது குறைவடைந்துள்ளமைக்கான ஒரு முக்கிய காரணமாகும். இவ்வாறு வெளிநாடு செல்லும் பெண்களில் அதிகமானவர்கள் சிங்கள மற்றும் தமிழ் பெண்களேயாவர். மேலும், வெளிநாடு செல்லும் பெண்களில் அதிகமானோர் திருமணமாகாதவர்களாகவே இருக்கின்றனர். சிங்கள மற்றும் தமிழ்ப் பெண்கள் அதிகமாக வெளிநாடு செல்வதன் குறிக்கோள் தங்களுடைய திருமணங்களுக்கான பணத்தை சம்பாதிப்பதாகும். இந்த நோக்கத்துடன் அவர்கள் வெளிநாடு சென்று

பணம் சம்பாதித்து, வீடு கட்டி, வீட்டுக்கான பொருட்கள் போன்றவற்றுடன் சேர்த்து சீதனத்திற்கான பணத்தையும் சேகரித்து தாயகம் திரும்பும் போது அவர்களுடைய இளமை வனப்பில் பாதி காலம் விடை பெற்று விடுகின்றது'

(2014 ஜூன் 27 ஆம் திகதி ரிவிர பத்திரிகையில் பிரசுரமாகிய வைத்திய நிபுணர் ஆரியசேன யூ. கமகேயின் கட்டுரையில் ஒரு பகுதி)

பெண்கள் மட்டுமல்லாமல், வெளிநாடு செல்லுபவர்களில் அதிகமான ஆண்கள் சிங்களவர்களாகவே இருப்பதை நாம் அனைவரும் அறிவோம். இது போன்ற விடயங்களும் சிங்கள சனத்தொகை வளர்ச்சியில் பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றன.

## 06. போதைப் பொருள் பாவனை

2014 மார்ச் 14 ஆம் திகதி "மவ்பிம" பத்திரிகையில் அப்போதைய சுகாதார அமைச்சர் மைத்ரிபால சிறிசேன அவர்கள் வெளியிட்ட தகவல் ஒன்றை கீழே தந்துள்ளோம்:

**'போதைப் பொருட்களை உட்கொள்வதன் காரணமாக இலங்கையில் நாளாந்தம் 360 பேர் உயிரிழக்கின்றனர்'**

"இலங்கையில் ஒரு நாளைக்கு சுமார் 1200 குழந்தைகள் பிறப்பதுடன் 1000 பேர் மரணிக்கின்றனர்"

"இந்த ஆயிரம் பேரில் தொற்றாத வகை நோய்கள் காரணமாக சுமார் 600 பேர் மரணிக்கின்றனர்"

"இந்த 600 பேரில் சுமார் 360 பேர் போதைப் பொருட்கள் பாவனையினால் ஏற்படும் நோய்கள் காரணமாக மரணிக்கின்றனர்"

அதிலும் பெரும்பான்மையான முஸ்லிம்கள் போதைப் பொருட்களை பயன்படுத்துவதில்லை என்பதை எவரும் ஏற்பர். இந்த அடிப்படையில் இத்தீய பழக்கம் காரணமாக இறப்பவர்களில் அதிகமானோர் எந்த சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதற்கு தனியான விளக்கம் அவசியமாகாது என்றே கருதுகின்றோம். எனவே, தற்போது அவசியப்படுவது என்னவென்றால் நாம் அனைவரும் ஒற்றுமையுடன் இணைந்து, மேலே விவரிக்கப்பட்ட சமூகப்

பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு காத்திரமான நடவடிக்கைகளை எடுப்பதேயாகும். இதை விட்டு விட்டு ஒருவருக்கு ஒருவர் பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதில் எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை.

## 07. கருச்சிதைவு

**2012 ஜுன் 17 ஆம் திகதி "லங்காதீப" பத்திரிகையில் வெளியாகியிருந்த ஒரு கட்டுரையின் சில முக்கிய பகுதிகளை இங்கு தருகின்றோம்.**

களனி பல்கலைக்கழகத்தின் சமூகவியல் பிரிவில் பணிபுரியும் கலாநிதி வஸந்த சுபசிங்ஹ, கருச்சிதைவு தொடர்பாக மேற்கொண்ட ஒரு ஆய்வின் போது பெற்ற தரவுகளின் அடிப்படையில் இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது. உத்தியோக பூர்வமற்ற அறிக்கைகளின்படி நாள் ஒன்றிற்கு இலங்கையில் 800 முதல் 1000 சட்ட விரோத கருச்சிதைவுகள் வரை மேற்கொள்ளப்படுகின்றன. இது தொடர்பான முதலாவது ஆய்வு 1998 ஆம் ஆண்டே மேற்கொள்ளப்பட்டது. இலங்கையில் ஒரு வருடத்திற்கு சுமார் 375,000 பிள்ளைப் பேறுகள் இடம்பெறுகின்றன. ஆனால் இதே வேளை மூன்று இலட்சத்திற்கும் அதிகமான கருச்சிதைவுகள் நடைபெறுவது பெரும் பிரச்சினையாக உள்ளது. கணக்கெடுப்பிற்குத் தென்பட்ட எண்ணிக்கைகள் இவ்வாறு இருப்பினும் இதையும் தாண்டிய பல சமூகப் பிரச்சினைகள் சட்ட விரோத கருச்சிதைவுகள் காரணமாக எழுவதைக் காணலாம்.

மேலே உள்ள அறிக்கை நமக்கு வலியுறுத்திக் கூறுவது யாது? நம் நாட்டில் சட்ட விரோதமாக பல கருச்சிதைவு நிலையங்கள் இருப்பதை நாம் ஊடகங்கள் மூலம் அறிகின்றோம். இந்த நிலையங்களில் தினமும் நடைபெறும் மறைமுக சிசு வதையைத் தடுப்பதற்கும் உயிர்களைப் பாதுகாப்பதற்கும் நாம் ஒன்றுபடுவோமாயின் அதன் மூலம் நம் நாட்டு சனத்தொகை வளர்ச்சியில் பாரிய மாற்றம் ஏற்படுவது நிச்சயமானதாகும். பரஸ்பரம் குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதை விடுத்து இது போன்ற பயனுள்ள முயற்சிகளில் ஈடுபடுவோமாயின் அதன் மூலம், குறிப்பாக சிங்கள சமூகம், பெரும் நன்மையை அடைவது உறுதியானதாகும்.

முஸ்லிம்களுடன் ஒப்பிடுகையில் கடந்த 130 ஆண்டுகளில் சிங்கள சனத்தொகை வளர்ச்சி வீதம் குறைவடைந்ததன் காரணமாக சிங்கள சனத்தொகை 3.2 மில்லியனால் குறைவடைந்துள்ளது. ஆனால், கருச்சிதைவை தடுப்பதில் வெற்றி கண்டால், இந்த 130 ஆண்டுகளில் குறைவடைந்த சிங்களவர் எண்ணிக்கையை எட்டு ஆண்டுகளில் பூர்த்தி செய்து விடலாம்.

## 08. சிசுக் கொலை

பிறந்த உடனேயே சிசுக்களை கொலை செய்து விடுவது இலங்கையில் நடைபெற்று வருவதுடன், இது கருச்சிதைவை விட குரூரமானதொரு பாதகச் செயலாகும் என்பதற்கு எதிர்வாதம் இருக்க முடியாது. இது தொடர்பாக பேராசிரியர் மயுர சமரகோன் மற்றும் 'அத' நாளேட்டின் நிருபர் பாலித ஆரியவங்ச இருவர் இடையே நடைபெற்ற ஒரு உரையாடலொன்று அப்பத்திரிகையின் 2013 ஒக்டோபர் 29 ஆம் திகதி வெளியான பிரசுரத்தில் காணப்படுகின்றது. அதில் இருந்து சில பகுதிகளை இங்கு தந்துள்ளோம்.

உலக சிறுவர் தினத்தைக் கொண்டாடுவதற்கு முழு உலகமும் ஆயத்தமாகிக் கொண்டிருந்த தினத்திற்கு மூன்று தினங்களுக்கு முன்பு பதுளைப் பகுதி மக்களுக்கு அன்று அதிகாலையிலேயே கவலையைத் தரக்கூடிய ஒரு காட்சி காணக்கிடைத்தது. பதுளை மேம்பாலத்திற்கு அருகில் துணியில் சுற்றிய ஒரு ஆண் சிசுவின் உயிரற்ற உடலொன்று கைவிடப்பட்டிருந்தது. பாலத்திற்கு மேலாக நடந்து சென்று கொண்டிருந்த ஒருவரே இந்த உடலை முதலில் கண்டுள்ளார். இது தொடர்பாக பதுளை போலிஸ் விசாரணையை ஆரம்பித்தது.

பதுளை நீதவான் நீதிமன்றத்தின் நீதிபதி அங்கு வந்து சிசுவின் உடலை பார்வையிட்டதுடன், பிரேதப் பரிசோதனை நடத்துமாறும் இந்த பாதகத்துடன் சம்பந்தப்பட்டவர்களை கைது செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் போலிஸ் அதிகாரிகளுக்குக் கட்டளையிட்டார். இதன் பிறகு சில மணி நேரங்களில் பதுளை போலிஸ் நிலையத்திற்கு ஒரு தகவல் கிடைத்தது. அதாவது ஹாலிஎல குயீன்ஸ் டவுன் தோட்டத்தில் கர்ப்பிணியாக இருந்த ஒரு பெண்ணின் சந்தேகத்திற்கு இடமான நடவடிக்கையைப் பற்றியதாகும்.

அப்பெண்ணை கைது செய்து விசாரித்த போது முற்றிலும் வேறு ஒரு சிசுவிற்கு ஏற்பட்ட அவலம் பற்றிய செய்தி வெளியாகியது. திருமணமாகாத அப்பெண் கருவுற்றதோடு, பிள்ளை பிறந்தவுடன் அப்பெண் தான் பெற்றடுத்த பிள்ளையை ஒரு பையில் கட்டி தனது வீட்டின் பின்புறத்தில் ஒரு வாழை மரத்திற்கு அடியில் புதைத்துள்ளார்.

கடந்த சில காலமாக பிறந்தவுடன் சிசுக்களை கொலை செய்யும் செய்திகள் நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் கிடைத்துள்ளது. பெற்ற தாய்மார்களே தங்களுடைய சேய்களை ஏன் இவ்வாறு குரூரமாகக் கொலை செய்கின்றார்கள் என்பதற்கான பதிலை தேடிப் பெறுவது இன்று ஒரு சமூகப் பொறுப்பாக ஆகியுள்ளது. இது பற்றி ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் சமரகோனிடம் வினவினோம்.

சிசுக்களை பிறந்தவுடன் கொலை செய்யும் கொடிய செயல் அதிகரித்து வருகின்றமை மேற்படி செய்திகள் மூலம் உறுதியாவதுடன், இதுவும் சனத்தொகை வீழ்ச்சிக்கான ஒரு காரணமாகும்.

## 09. ஒழுக்கச் சீரழிவு

2013 ஆகஸ்டு 16 ஆம் திகதி கீழ்க்காணும் செய்தி "மவ்பிம" பத்திரிகையில் வெளியாகியிருந்தது:

**இலங்கையில் நாள் ஒன்றிற்கு சுமார் 140,000 பேர் விபச்சாரத்தில் ஈடுபடுகின்றனர். ஓரினச்சேர்க்கை 10 வீதத்தால் அதிகரித்துள்ளது!**

இலங்கையில் நாள் தோறும் சுமார் 140,000 பேர் விபச்சாரிகளிடம் செல்கின்றனர் அல்லது கள்ளத் தொடர்பில் ஈடுபடுகின்றனர் என அண்மையில் அரச சார்பற்ற அமைப்புக்களின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட ஒரு கணிப்பாய்வு மூலம் புலனாகியுள்ளதாக பாலுறவு நோய்கள் மற்றும் எய்ட்ஸ் ஒழிப்பு இயக்கத்தின் பணிப்பாளர் டாக்டர் சிசிர லியனகே தெரிவித்தார்.

மேற்படி தகவல் மூலம் சனத்தொகை அபிவிருத்திக்குத் தடையாக உள்ள இரு விடயங்கள் பற்றித் தெரிய வருகின்றன. முதலாவது விடயம், விபச்சாரத்தில் ஈடுபடுபவர்கள் பிள்ளைப் பேற்றை நோக்கமாக ஆக்கி அச்செயலில் ஈடுபடுபவர்கள் அல்ல என்பதாகும். இதில் உடலின்பம் அல்லது பணம் ஆகியவையே நோக்கமாகக் கொள்ளப்படுகின்றது. இரண்டாவது விடயம், தன்னினச்சேர்க்கை செய்பவர்கள் அதிகரித்து வருகின்றமையாகும். இவர்களும் சனத்தொகை விருத்தி பற்றி கவலை கொள்பவர்கள் அல்ல என்பதை விசேடமாகக் கூறத்தேவையில்லை.

## 10. துறவரம்

பௌத்த பிக்குகள் அல்லது கிறிஸ்தவப் பாதிரிமார்கள் போல முஸ்லிம் சமூகத்தில் மத குருமார்கள் என்றொரு பிரிவு கிடையாது. பள்ளி வாசலில் பணிபுரியும் ஆலிம்களும் ஏனையோரைப் போன்றே திருமணம் செய்து குடும்ப வாழ்க்கை வாழ்கின்றனர். எனவே மதகுருவாக ஆகுவதனால் சனத்தொகை குறையும் என்ற பிரச்சினை முஸ்லிம்களைப் பொறுத்தமட்டில் கிடையாது.

(2014 ஜுன் 27 ஆம் திகதி ரிவிர பத்திரிகையில் பிரசுரமாகிய வைத்திய நிபுணர் ஆரியசேன யூ. கமகேயின் கட்டுரையில் ஒரு பகுதி)

## 11. மூன்று தசாப்த யுத்தம்

மூன்று தசாப்தங்களாக நடைபெற்ற யுத்தம் காரணமாக அதிக எண்ணிக்கையிலான சிங்கள மக்களும் தமிழ் மக்களும் மரணித்தனர் என்பதை நாம் அறிவோம்.

முஸ்லிம்களும் யுத்தம் காரணமாக மரணித்தனர் என்ற போதிலும், மோதலுடன் நேரடியான தொடர்புடைய சமூகமாகிய தமிழ் மக்களுடைய மற்றும் இராணுவத்தில் அதிகூடிய பேர் பணிபுரியும் பெரும்பான்மை சமூகமான சிங்களவர்களுடைய உயிர் இழப்புகளுடன் ஒப்பிடுகையில் முஸ்லிம்களின் உயிரிழப்பு குறைவானதே. யுத்தத்தில் மாண்ட சிங்கள போர் வீரர்கள் மற்றும் தமிழ் போராளிகளின் எண்ணிக்கை மிக அதிகமாக காணப்பட்டதோடு, மோதல் நிலை காரணமாக நாட்டை விட்டும் புலம் பெயர்ந்த தமிழ் மக்களின் எண்ணிக்கையும் கணிசமானதே.

இந்த விடயங்களை நடுநிலையாக எடை போடும் எவருக்கும் முஸ்லிம்கள் தங்களுடைய இனத்தைத் திட்டமிட்டு அதிகப்படுத்தி வருகின்றனர் என்ற கூற்றில் அணுவளவும் உண்மை இல்லை என்பது மட்டுமின்றி அது ஒரு அபத்தமான, செயல் சாத்தியமற்ற விடயம் என்பதும் மிகத் தெளிவானதாகும்.

## குற்றச்சாட்டு 2

1881 காலப்பகுதியில் 1,846,600 என்ற எண்ணிக்கையில் இருந்த சிங்கள மக்கள் தொகையானது, 2012 ஆண்டளவில் 15,173,820 ஆக ஆகியமை 8.22 மடங்கு அதிகரிப்பாகும். அதாவது 822% அதிகரிப்பாகும். இந்த 130 வருட காலப்பகுதியில் இலங்கைத் தமிழ் மக்கள் 3.3 மடங்கு, அதாவது 330% அதிகரித்துள்ளனர். இந்திய வம்சாவளி தமிழர்கள் 1.5 மடங்கு (159%) அதிகரித்துள்ளனர். ஆனால் இதே வேளை, முஸ்லிம்கள் இந்த காலத்திற்குள் 10.13 மடங்காக (1013%) அதிகரித்துள்ளனர். இவ்வதிகரிப்புக்களை விகிதாசார அடிப்படையில் நோக்கும் போது 1881 ஆம் ஆண்டில் 66.91 ஆக இருந்த சிங்கள இனம் 2012 வரையான 130 ஆண்டுகளில் 7.97% மட்டுமே அதிகமாகியுள்ளனர். இதே வேளை, 1881 ஆம் ஆண்டில் 6.69% ஆக இருந்த முஸ்லிம்கள், இந்த 130 ஆண்டு காலத்திற்குள் 2.54% வீதத்தால் அதிகரித்துள்ளனர். முஸ்லிம்களுடைய சிறு வீதத்தை நோக்கும் போது இந்த வளர்ச்சி பெரும்பான்மை சிங்களவர்களின் வளர்ச்சியாகிய 7.97% விட மிக அதிகமானதாகும். இந்த ஒப்பீட்டை வேறு விதத்தில் கூறுவதாக இருந்தால், முஸ்லிம்களுடைய இதே வளர்ச்சி வேகத்தில் சிங்களவர்களும் தமது இனத்தை விருத்தி செய்திருந்தால் இன்று சிங்களவர்களின் மக்கள் தொகை 24.5% வீதத்தால் அதிகமாகி இருக்கும். ஆனால் சிங்கள இனம் 130 ஆண்டுகளில் 8% ஐ விடக் குறைவாகவே வளர்ச்சி பெற்றுள்ளது' என்ற மற்றுமொரு குற்றச்சாட்டை முன்வைக்கின்றனர்.

## தெளிவுரை

மேலே குறிப்பிட்டுள்ள விடயங்களில் அனுமானங்கள் சில இருப்பதுடன், சில தகவல்கள் சரியானவை அல்ல. மேலும் அவை நடைமுறை சாத்தியமானவையும் அல்ல. நம்முடைய இந்த கூற்றுக்களை நிரூபிக்கவும் தயாராக உள்ளோம். மேலும், மேற்படி 'குற்றச்சாட்டுக்களை' முன்வைப்பவர்கள் ஒரு முக்கியமான அம்சத்தை கைவிட்டுள்ளமையும் கேள்விக்குரியதே. அதாவது, முஸ்லிம்களின் வேகத்தில் சிங்களவர்களும் வளர்ச்சி அடைந்திருப்பின் 25.4% அதிகரிப்பை காட்டி இருக்கும் என வாதிட்டுள்ள போதிலும் அந்த பாரிய வளர்ச்சி எண்ணிக்கை அடிப்படையில் எவ்வளவாக இருந்திருக்கும் என்பதை குறிப்பிடுவதில் இருந்து குற்றம் சுமத்துவோர் நழுவியுள்ளனர். இதற்கான காரணம் அந்த அசாத்திய வளர்ச்சியை எண்ணிக்கை வடிவத்தில் குறிப்பிட்டால் அவர்களுடைய வாதத்தில் உள்ள அபத்தம் அதை வாசிக்கும் எவருக்கும் புரிந்து விடும். அதை நாம் ஒரு அட்டவணை மூலம் தெளிவு படுத்தியுள்ளோம்:

அதாவது கற்பனை செய்யப்பட்டுள்ள வேகத்தில் (25.4%) 1881 முதல் 2012 வரை சிங்கள சமூகம் பெருகியிருந்தால் இன்று சிங்களவர்களின் சனத்தொகை 48.36 மில்லியனாக இருந்திருக்கும்!

$$\frac{\text{1881 இல் சிங்களவர்களின் சனத்தொகை} \times 25.4}{\text{2012 இல் சிங்களவர்களின சனத்தொகை வீதம்}} = \text{25.4\% அதிகரிப்பு}$$

$$\frac{15{,}173{,}820 \times 25.4}{7.97} = 48{,}358{,}222$$

இத்தொகையுடன் ஏனைய சமூகங்களின் எண்ணிக்கையையும் சேர்த்தால் இச்சிறு இலங்கைத் தீவின் சனத்தொகை 53.45 மில்லியனாக இருந்திருக்கும். ஆனால் இந்தளவு பிரமாண்டமான சனத்தொகையை 2040 ஆம் ஆண்டில் கூட இலங்கை எட்டாது என்ற விடயத்தைச் சிறிதளவேனும் அறிவுள்ள எவராலும் புரிந்து கொள்ளலாம்.

சமூகங்களின் சனத்தொகை அதிகரிப்புத் தொடர்பான நடைமுறை சாத்தியமான எதிர்வுகளை நாம் குற்றச்சாட்டு 1 இன் கீழ்

விவரித்திருந்தோம். முஸ்லிம்கள் பற்றிய அர்த்தமற்ற பீதியொன்றை தோற்றுவிக்கும் நோக்கில் இது போன்ற அபத்தமான, செயல் சாத்தியமற்ற கற்பனைகளைக் கூறி விவரமறியாத சிங்கள மக்கள் மத்தியில் சலசலப்பை ஏற்படுத்த முயற்சிப்பது ஒரு பண்பாடற்ற செயலாகும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

### குற்றச்சாட்டு 3

'2032 ஆம் ஆண்டில் சிங்களவர்களை முஸ்லிம்கள் சனத்தொகையால் மிகைத்து விடுவார்கள்'

'2040 ஆம் ஆண்டளவில் முஸ்லிம்கள் இந்த நாட்டின் பெரும்பான்மை இனமாக மாறி விடுவார்கள்'

'இந்நாட்டில் சிங்கள மக்கள் பெரும்பான்மையாக இருக்கும் கடைசி நூற்றாண்டு இதுவே'

## தெளிவுரை

இஸ்லாம் பற்றிய பீதியை ஏற்படுத்துவதற்கு பயன்படுத்தும் பிரதான கூற்றுக்கள் இவையாகும். தற்போதைய சனத்தொகை வளர்ச்சி வீதத்தை வைத்தே இந்த அச்சுறுத்தல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆகையால், இவை தொடர்பான தகவல்களைத் தீர ஆராய்வது பொருத்தமாக இருக்கும்.

1881 முதல் 2012 வரை ஒவ்வொரு சமூகத்தினருக்குமான வளர்ச்சி வீதத்தை வைத்து 2032, 2040, 2100 போன்ற எந்தவொரு ஆண்டிலும் அவரவருடைய சனத்தொகை எண்ணிக்கை அண்ணளவாக எவ்வாறு இருக்கும் என்பதை நாம் கணிக்கலாம். இதில் எந்த சிரமமும் இல்லை. இந்த கணிப்பை மேற்கொள்வதற்கான வேறு காரணிகளை நாம் பயன்படுத்த முடியாது என்ற காரணத்தால் கணிதத்தையே இதற்குப் பயன்படுத்த வேண்டியுள்ளது. உதாரணத்திற்காக 2050 ஆம் ஆண்டில் (அதாவது இன்னும் 38 ஆண்டுகளில்) இங்குள்ள சமூகங்களின் சனத்தொகை எண்ணிக்கை பற்றி கணித ரீதியான எதிர்வுகள் கீழே தரப்பட்டுள்ளன:

130 ஆண்டுகளில் சிங்களவர் வளர்ச்சி வீதம் $\frac{2012 \text{ சனத்தொகை} = 15,173,820}{1881 \text{ சனத்தொகை} = 1,846,600}$ = 8.217

ஒரு வருடத்திற்கான சராசரி வளர்ச்சி வீதம் = $\frac{8.217}{130}$ = 0.063

இந்த அடிப்படையில் 2050 இல் சிங்கள சனத்தொகை = 2012 சனத்தொகை x 0.063 x 38
= 15,173,820 x 0.063 x 38 =36,326,125
= 36.33 மில்லியன்

130 ஆண்டுகளில் முஸ்லிம்கள் வளர்ச்சி வீதம் $\frac{2012 \text{ சனத்தொகை} = 1,967,227}{1881 \text{ சனத்தொகை} = 1,97,800}$ = 9.946

ஒரு வருடத்திற்கான சராசரி வளர்ச்சி வீதம் = $\frac{9.946}{130}$ = 0.0766

இந்த அடிப்படையில் 2050இல் முஸ்லிம் சனத்தொகை = 2012 சனத்தொகைx 0.0766 x 38
= 1,967,227 x 0.063 x 38 =5,681,352
= 5.68 மில்லியன்

130 ஆண்டுகளில் தமிழர் வளர்ச்சி வீதம் $\frac{2012 \text{ சனத்தொகை} = 3,122,676}{1881 \text{ சனத்தொகை} = 715,400}$ = 4.365

ஒரு வருடத்திற்கான சராசரி வளர்ச்சி வீதம் = $\frac{4.365}{130}$ = 0.034

இந்த அடிப்படையில் 2050இல் தமிழர் சனத்தொகை = 2012 சனத்தொகை x 0.034 x 38
= 3,122,676 x 0.034 x 38 = 4,034,497
= 4.03 மில்லியன்

மேற்படி கணிப்பின்படியும் 2050 ஆம் ஆண்டிலும் பெரும்பான்மை இனமாக சிங்களவர்களே இருப்பதோடு அவர்களின் மொத்தத் தொகை 36.33 மில்லியனாக இருக்கும். அதே போன்று முஸ்லிம் மற்றும் தமிழ் இனங்களின் தொகை முறையே 5.68 மில்லியன் மற்றும் 4.03 மில்லியனாக இருப்பதோடு 2050 ஆம் ஆண்டு மொத்த சனத்தொகை 46.04 மில்லியனாக இருக்கும். இருப்பினும் இவை யதார்த்தமான தொகைகள் அல்ல. எனவே,

கீழே உள்ளது போல, ஒரு யதார்த்தமான கணிப்பில் இருந்து ஒரு மதிப்பீட்டைச் செய்தால் நடைமுறை சாத்தியமான எண்ணிக்கைகளை நாம் பெறலாம்.

1881 முதல் 2012 வரை ஒட்டு மொத்த சனத்தொகை வளர்ச்சி வீதம்

$$= \frac{(2012 \text{ சனத்தொகை} - 1881 \text{ சனத்தொகை})}{1881 \text{ சனத்தொகை}} \times 100$$

$$= \frac{(20,263,723 - 2,759,800)}{2,759,800} \times 100 = 634\%$$

1881 முதல் 2012 வரையான 130 ஆண்டுகளில் வருடாந்த வளர்ச்சி வீதம்

$$= \frac{643}{130} = 4.88\%$$

யதார்த்தமான ஒரு கணிப்பீடொன்றிற்காக 1881 – 2012 காலப்பகுதியின் சனத்தொகை வளர்ச்சி வீதத்தை விடவும், சீரான சனத்தொகை வளர்ச்சி தென்பட்ட 1981-2012 காலப்பகுதியின் வளர்ச்சி வீதம் இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. இக்காலப்பகுதியின் வளர்ச்சி வீதம் கீழ்க்காணும் விதத்தில் காணப்பட்டது:

1981 முதல் 2012 வரை ஒட்டுமொத்த சனத்தொகை வளர்ச்சி வீதம்

$$= \frac{(2012 \text{ சனத்தொகை} - 1981 \text{ சனத்தொகை})}{1981 \text{ சனத்தொகை}} \times 100$$

$$= \frac{(20,263,723 - 14,846,700)}{14,856,700} \times 100$$

$$= 36\%$$

1981 முதல் 2012 வரையான 30 ஆண்டு காலப்பகுதியின் வருடாந்த சனத்தொகை வளர்ச்சி வீதம் $= \frac{36}{30} = 1.2\%$

மேற்படி கணிப்பானது தற்போதைய வளர்ச்சி வீதத்துடன் ஒப்பானதாக இருப்பதால் இதை யதார்த்தமானதொரு கணிப்பீடு என்பதை எவராலும் ஏற்க முடியும். இதை கீழ்க்காணும் விதத்தில் கூட்டல் விருத்தி சமன்பாட்டு முறையில் காட்டலாம்:

| | |
|---|---|
| 2012 சனத்தொகை | = P |
| 1981 முதல் 2012 வரையான 30 ஆண்டு காலப்பகுதியின் வருடாந்த வளர்ச்சி வீதம் | = Q |
| கணிப்பீட்டில் பயன் படுத்தப்பட்டுள்ள வருடங்கள் (1) | = R |
| இதன் அடிப்படையில் 2050 ஆம் ஆண்டு மொத்த சனத்தொகை | = S |

$$P + \frac{(P x Q x R)}{100} = S$$

$$20{,}263{,}723 + \frac{(20{,}263{,}723 x 1.2 x 37)}{100} = 29{,}260{,}816$$

மேலே உள்ள கணிப்பின்படி 1.2% வளர்ச்சி வீதமொன்று தொடர்ச்சியாக இருக்குமாயின், 2050 ஆம் ஆண்டளவில் இலங்கையின் முழு சனத்தொகை 29.26 மில்லியனாக இருக்கும். இவ்வெண்ணிக்கையை 2012 ஆம் வருடத்தில் இனங்களின் விகிதாசாரத்தின் படி வகுத்தால் அது பெரும்பாலும் கீழ்க்காணும் விதத்தில் இருக்கும். 2050 ஆம் ஆண்டு தமிழ் மக்களின் சனத்தொகையில் மாற்றமேதும் இல்லாமல், மீதமாகும் தொகையில் முஸ்லிம்கள் 51% ஆகும் பட்சத்தில் ஏற்படும் நிலைமையும் கீழ்வரும் அட்டவணையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

| | 2012 ஆம் ஆண்டின் வளர்ச்சி வீதங்கள் மாறாமல் இருக்கும் பட்சத்தில் | | தமிழ் மக்களின் சனத்தொகையில் மாற்றமேதும் இல்லாமல், மீதமாகும் தொகையில் முஸ்லிம்கள் 51% ஆகும் பட்சத்தில் | | | 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு |
|---|---|---|---|---|---|---|
| இனங்கள் | 2050 | 2012 - % | 2050 | % | வித்தியாசம் | |
| சிங்களவர் | 21,910,499 | 74.88% | 12,128,345 | 41.45% | -9,782,154 | -5,391,666 |
| முஸ்லிம்கள் | 2,841,225 | 9.71% | 12,623,379 | 43.14% | +9,782,154 | +7,814,927 |
| தமிழர்கள் | 4,509,092 | 15.41% | 4,509,092 | 15.41% | - | - |
| மொத்தம் | 29,260,816 | **100.00%** | 29,260,816 | **100.00%** | | |

2050 ஆண்டில் முஸ்லிம்கள் 51% ஆகும் பட்சத்தில் அதன் எண்ணிக்கை

= (ஒட்டுமொத்த சனத்தொகை – தமிழர் சனத்தொகை) x 51%

= (29,260,816 – 4,509,092) x 51%

= 12,623,379

2050 ஆம் ஆண்டில் சிங்களவர்கள் 49% ஆவார்கள் எனில் அதன் எண்ணிக்கை

= (ஒட்டுமொத்த சனத்தொகை – தமிழர் சனத்தொகை) x 49%

= (29,260,816 – 4,509,092) x 49%

= 12,128,345

யதார்த்தமான சனத்தொகை வளர்ச்சி வீதமொன்றை அடிப்படையாகக் கொண்டு கணிக்கும் பட்சத்தில் 2050 ஆம் ஆண்டில் முஸ்லிம்கள் இலங்கையில் பெரும்பான்மை இனமாகுவதற்கு, 2012 ஆம் ஆண்டு முதல் கீழ் காணும் விதத்தில் முஸ்லிம்களின் வளர்ச்சி வீதம் இருந்தாக வேண்டும்.

$$\frac{7,814,927}{1,967,227} \times 100 = 397.26\%$$

மறுபுறத்தில் சிங்கள சமூகம் கீழ்க்காணும் விதத்தில் 2012 ஆம் ஆண்டில் வளர்ச்சி குன்றியாக வேண்டும்.

$$\frac{-5,391,666}{15,173,820} \times 100 = -35.53\%$$

இவ்விரண்டும் சிறிதும் சாத்தியமற்ற நிலைகளாகும்.

இவற்றின் அடிப்படையில் முஸ்லிம்கள் பெரும்பான்மை ஆவார்கள் எனக்கூறப்படுவது முஸ்லிம்கள் தொடர்பான பீதியை ஏற்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் ஒரு பொய்யான பிரசாரமேயன்றி வேறில்லை என்பதை எவராலும் புரிந்து கொள்ள முடியும்.

## குற்றச்சாட்டு 4

## 1. திருகோணமலை மற்றும் வவுனியா மாவட்டங்களில் காணப்படும் முஸ்லிம்களின் அசாதாரண சனத்தொகை வளர்ச்சி

தமிழ் மக்களின் அதிகூடிய சனத்தொகை வீழ்ச்சி திருகோணமலை மற்றும் வவுனியா மாவட்டங்களிலேயே தென்படுவதுடன், இவை முறையே 15.8% மற்றும் 10.8% ஆகும். இந்த மாவட்டங்களில் முஸ்லிம் சனத்தொகை வளர்ச்சி முறையே 12.2% மற்றும் 5.6% ஆகும். அனுராதபுரம் மற்றும் பொலன்நறுவை மாவட்டங்களில் மட்டுமே முஸ்லிம்களின் சனத்தொகை சிறிதளவு குறைவடைந்துள்ளது.


## விளக்கவுரை

வேடிக்கை என்னவென்றால் இக்குற்றச்சாட்டிலேயே அதற்கான பதிலும் பொதிந்துள்ளமையாகும். அதாவது ஒரு குறிப்பிட்ட பகுதியில் ஒரு இனத்தின் சனத்தொகை எண்ணிக்கை குறைவடையும் போது அங்குள்ள ஏனைய இனத்தின் -அல்லது இனங்களின்- வீதம் உயர்வடைவது ஒரு கணித இயல்பாகும். இதற்காக முஸ்லிம்களோ இந்த மாவட்டங்களில் வாழும் ஏனைய இனங்களோ பெரும் திட்டங்களை வகுப்பதோ சூழ்ச்சிகளை அமைப்பதோ தேவையற்றது. இதைப் புரிந்து கொள்வதற்கு எவரும் கணிதமேதை ஆக வேண்டியதில்லை. இது தொடர்பாக இந்த மாவட்டங்களின் தம்பலகாமம், குச்சவெளி, மூதூர், திருகோணமலை போன்ற பகுதிகளின் கிராமசேவகர் குறிப்புகளின் பிரகாரம் முன்பு இவை தமிழ் மக்கள் பெரும்பான்மையாக இருந்த பகுதிகளாகவே இருந்துள்ளன. ஆனால் இப்பகுதிகளுக்கு புலிகளின் அச்சுறுத்தலுடன் இராணுவத் தாக்குதல்களும் அதிகமாகவே புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த முல்லைத்தீவிற்கு அவர்கள் இடம் பெயர்ந்தனர். அது மட்டுமன்றி, ஐரோப்பிய நாடுகள், கனடா, மற்றும் இந்தியாவுக்கும் பெரும் திரளான தமிழ் மக்கள் நிரந்தரமாக புலம் பெயர்ந்தனர்.

வவுனியா மாவட்டத்தின் நிலையும் இது போன்றதே. இந்நிலை காரணமாக வழிபாடுகள் இன்றி கைவிடப்பட்ட கோயில்களை இதற்கான சான்றுகளாக இப்குதிகளில் ஏராளமாக இன்றும் காணலாம்.

இதே வேளை, இப்பகுதிகளில் புலிகளின் அச்சுறுத்தல் அதிகமான காலகட்டத்திலும் அவற்றை விட்டு வெளியேறாமல் இராணுவத்தினருக்கு ஒத்துழைப்பு வழங்கியவர்கள் முஸ்லிம்களே. மூதூர் முஸ்லிம்களிடம் இருந்து இது போன்ற ஒத்துழைப்புக்கள் கிடைத்து வந்ததன் காரணமாக அப்பகுதியை விட்டு வெளியேறாமல் தொடர்ந்து தங்கியிருந்து தமக்கு ஒத்துழைப்புத் தருமாறு இராணுவத்தினரும் முஸ்லிம்களிடம் கேட்டுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. இதன் காரணமாக புலிகள் மூதூர் பிரதேசத்தை விட்டுப் பின்வாங்கியதுடன் அப்பயங்கரவாத இயக்கத்தின் வீழ்ச்சியின் ஆரம்பமும் அப்போதுதான் ஆரம்பமாகியது என்றால் அது மிகையாகாது.

ஆனால், தமது உயிர்களைப் பணயம் வைத்து இது போன்ற அர்ப்பணிப்புகளை செய்த முஸ்லிம் சமூகம் பற்றி அர்த்தமே இல்லாத கற்பனை குற்றச்சாட்டுக்களை பரப்புவது பெரும்பான்மை சமூகத்தின் உள்ளங்களில் முஸ்லிம்கள் பற்றிய வெறுப்பை உண்டுபண்ண செய்யப்படும் முயற்சியாகும்.




## 2. அம்பாறை மாவட்ட முஸ்லிம்களின் சனத்தொகை வளர்ச்சி

பௌத்த சனத்தொகை 1.1% என வீழ்ச்சி அடைந்துள்ள அம்பாறையில் முஸ்லிம்களின் வீதம் 2.3% அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## விளக்கவுரை

மேலே உள்ள பிரதான குற்றச்சாட்டு அம்பாறையில் முஸ்லிம்களின் சனத்தொகை 2.3% அதிகரித்துள்மையே. மேலும், இம்மாவட்டத்தில் சிங்களவர்கள் குறைந்துள்ளனர் என்றும் குரலெழுப்பப்பட்டுள்ளது. இக்கூற்றுக்களுக்கு சனத்தொகை மற்றும் புள்ளி விபரத் திணைக்களம் விளக்கம் அளித்துள்ளது. இது தொடர்பாக 2007 ஒக்டோபர் 10 ஆம் திகதி அத்திணைக்களம் ஆங்கில மொழியில் வெளியிட்டுள்ள அறிக்கையில் 17 ஆம் பக்கத்தில் உள்ள தகவல்கள் மொழிபெயர்க்கப்பட்டு கீழே தரப்பட்டுள்ளன.




தெஹிஅத்தக் கண்டிய பிரதேச செயலாளர் பிரிவின் ஒருபகுதி பொலன்னறுவை மாவட்டத்தின் திம்புலாகல பிரதேச செயலாளர் பிரிவுடன் இணைக்கப்பட்டதைக் காட்டும் படம்

"Number and percentage distribution of population by ethnicity from 1963 to 2007 is shown in Table G. It is seen that 44.0 percent of the population in Ampara district are Sri Lanka Moors in 2007. Sinhalese and Sri Lanka Tamil comprises of 37.5 percent and 18.3 percent respectively. (See Figure D). <u>There is a slight increase in the percentage of Sri Lanka Moor, and a decrease of percentage of Sinhalese in comparison to 2001 Census figures. A major reason for the above changes is the amalgamation of part of Dehiattakandiya DS division in Ampara district to Dimbulagala DS division in Polonnaruwa district, after the Population Census 2001</u>". ('Basic Population Information – 2007 – Ampara District – Page 17 – Department of Census and Statistics)

2007 ஆம் ஆண்டில் அம்பாறை மாவட்டத்தில முஸ்லிம்களின் சனத்தொகை வீதம் 44% காணப்பட்டதுடன் சிங்கள மற்றும் தமிழ் இனங்கள் முறையே 37.5% மற்றும் 18.3% என்ற வீதங்களில் இருந்தனர். 2001 ஆம் ஆண்டு சனத்தொகை கணக்கெடுப்புகளுடன் ஒப்பிடுகையில் சிறிய அளவில் முஸ்லிம்கள் அதிகரித்துள்ளமையும் சிங்களவர்கள் குறைவடைந்துள்ளமையும் புலனாகின்றது. இதற்கான முக்கியக் காரணம், 2001 ஆம் ஆண்டு சனத்தொகை கணக்கெடுப்பின் பின் அம்பாறை மாவட்ட தெஹியதகண்டிய பிரதேச செயலகப் பிரிவின் ஒரு பகுதியை பொலன்னறுவ மாவட்ட திம்புலாகல பிரதேச செயலகப் பிரிவுடன் ஒன்றிணைத்தமையாகும்'

தெஹியதகண்டிய, சிங்களவர்கள் பெரும்பான்மையாக வசிக்குமொரு பகுதியாகும். அதில் ஒரு பகுதியை அம்பாறை மாவட்டத்தில் இருந்து நீக்கும் போது அம்மாவட்டத்தின் சிங்கள சனத்தொகை குறைவாகத் தென்படுவது இயல்பே. அவ்வாறு நிகழும் போது ஒரு முஸ்லிம் குழந்தை கூட பிறக்கவில்லை என்று வைத்துக் கொண்டாலும் அம்மாவட்டத்தின் முஸ்லிம்களின் விகிதாசாரம் உயர்வடைவதில் எந்த வியப்பும் கிடையாது.

இது வரை நாம் விளக்கிய விடயங்களை எடைபோடும் போது முஸ்லிம்கள் இந்நாட்டு பெரும்பான்மை இனமாக மாறி வருகின்றார்கள் என்ற கூற்று சிங்கள மக்கள் மத்தியில் தேவையற்ற அச்சத்தைத் தோற்றுவிப்பதற்கு களமிறக்கப்பட்டுள்ளதொரு பொய்யான பிரசாரமே என்ற விடயம் தெளிவாகுவதோடு, இதன் பின்னணியில் நம் நாட்டின் முன்னேற்றத்தை விரும்பாத உள்நாட்டு வெளிநாட்டு தீய சக்திகள் இருக்கின்றனவோ என்ற பலமான சந்தேகம் எவருக்கும் எழலாம்.

பல வருடங்களாக நடைபெற்ற பயங்கரவாத யுத்தம் முடிவுற்றுள்ள நிலையில், அந்த துரதிஷ்டவசமாக நீண்ட காலத்தில் இனங்கள் இடையே ஏற்பட்ட சந்தேகம், அச்சம், வெறுப்பு போன்ற தீய எண்ணங்களை நீக்கி நம் அனைவரிடமும் நல்லிணக்கம் உருவாக, தத்தமது மத, மொழி, கலாசார அடையாளங்களையும் பேணிய வண்ணம், ஒரு தாய் பிள்ளைகளைப் போல கைகோர்த்து தேசத்தின் சமாதானத்திற்காகவும் அபிவிருத்திக்காகவும் ஒன்றுபட்டு பாடுபட வேண்டியது இலங்கையர் ஒவ்வொருவருடையவும் கட்டாயக் கடமையாகும்.

இக்கட்டுரைத் தொடர் மூலம், இலங்கையில் வசிக்கும் அனைத்து சமூகங்களிடையே பரஸ்பர நம்பிக்கை, சகோதரத்துவம், விட்டுக்கொடுத்தல், பிறர் கருத்துக்கு மதிப்பளித்தல் போன்ற நற்குணங்களுள்ள மக்கள் வாழும் ஒரு முன்மாதிரியான தேசமாக நம் நாட்டை உலக அரங்கில் உயர்வடையச் செய்வதே இக்கட்டுரைத் தொடரின் நோக்கமாகும். எனவே, காலத்தின் முதன்மைத் தேவையான இவ்வுன்னதப் பணியில் எம்முடன் ஒன்றிணையுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். நன்றி!

கட்டுரை 01 மாமிச நுகர்வு
கட்டுரை 02 முஸ்லிம்களது சனத்தொகை வளர்ச்சி தொடர்பான அச்சம்
கட்டுரை 03 முஸ்லிம் பள்ளிவாசல்களின் அசாதாரணமான பரவல்
கட்டுரை 04 ஆசிய பௌத்த நாடுகள் இஸ்லாமிய மயப்படுத்தப்படல்
கட்டுரை 05 அல் - காயிதா, அல் - ஜிஹாத் - இஸ்லாமிய பயங்கரவாதத்தின் யதார்த்தம்
கட்டுரை 06 கடும்போக்குவாத இஸ்லாமிய ஆடை அணிகலன்கள்

**சமூகங்களுக்கிடையிலான கலந்துரையாடல் மேலதிக பிரதிகளுக்கு அழையுங்கள்:**


அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா
281, ஜயந்த வீரசேகர மாவத்தை, கொழும்பு -10, இலங்கை
தொலைபேசி: +94 11 7490490 பெக்ஸ்: +94 11 2435859
மின் அஞ்சல்: info@acju.lk
இணையம்: www.acju.lk

UNITY HUB
த.பெ. இலக்கம்: 134, தெஹிவளை.
தொலைபேசி: +94 778 451 919 +94779 481 919
+94 779 741 919
மின் அஞ்சல்: teamunityhub@gmail.com
இணையம்: www.unityhub.org

ISBN 978-955-7605-00-5

PRINTED BY PRINTPAL (PVT) LTD.
319, Kolonnawa Road, Kolonnawa. Hotline: 0777709939